# DEPOSITION OF WITNESS

---

IN THE COURT OF SUBORDINATE JUDGE, DEVAKOTTAI.

| | | |
|---|---|---|
| MCOP .No. | : | 79/2022 |
| Deposition of Witness for | : | P.W.1 |
| | : | D.W. |
| | : | R.W. |
| | : | Court. |
| Name | : | ராஜசேகரன் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 11.06.2026

**முதல் விசாரணை:**

நான் 2ம் மனுதாரர். மனுதாரர் தரப்பு 1ம் சாட்சியாவேன். நான் இத்துடன் தாக்கல் செய்துள்ள நிருபணவாக்குமூலத்தை முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். எனது தரப்பு கீழ்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1. முதல் தகவல் அறிக்கை சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. பிரேத பரிசோதனை அறிக்கை சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

3. TN 63 N 1658 என்ற பதிவு எண் கொண்ட அரசு பேருந்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

4.குற்ற இறுதி அறிக்கை சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

5. மெடிக்கல் பில்கள் அசல் **ம.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

6. டிஸ்சார்ஜ் சம்மரி அசல் **ம.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

7. விபத்தில் இறந்துபோன முத்துராமலிங்கம் தேவகோட்டை கிளை எல்.ஐ.சி அலுவலகத்தில் ஏஜெண்டாக இருந்து வந்தார் என்பதற்கான அடையாள அட்டை அசல் **ம.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

8. மேற்படி எல்.ஐ.சி அலுவலகத்தில் இருந்து கொடுக்கப்பட்ட ஸ்டேட்மெண்ட் நகலில் உள்ளவர்களுக்கு ஏஜெண்டாக இருந்துள்ளார் என்பதற்கான ஸ்டேட்மெண்ட் அசல் (அதில் சீல் இல்லை என குறிப்பிட்டு ஆட்சேபிக்கப்பட்டு ஆட்சேபனைக்கு உட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது) **ம.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:**

1. விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். 1ம் மனுதாரர் என் அம்மா என்றால் சரிதான். அவர் இறந்தவரின் மனைவி என்றால் சரிதான். 2, 3, 4 மனுதாரர்கள் அவரின் வாரிசுகள் என்றால் சரிதான். இறந்த முத்துராமலிங்கம் என்பவரின் வாரிசுகள் நாங்கள் என்பதை காண்பிப்பதற்கு வாரிசு சான்றிதழ்களை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 3ம் மனுதாரர் ராதிகா, 4ம் மனுதாரர் ராஜேஸ்வரி ஆகியோர்களுக்கு திருமணம் நடைபெற்றுவிட்டது என்றால் சரிதான். எனக்கும் திருமணமாகி தனியாகத்தான் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். இறந்துபோன என் அப்பாவின் வருமானத்தை நம்பி 1ம் மனுதாரர் மட்டுமே வாழ்ந்து வருகிறார் என்றால் சரிதான். பேருந்தின் முன்பக்க படிக்கட்டில் நின்று தான் என் அப்பா பயணம் செய்தார் என்றால் சரியல்ல. விபத்தின் போது என் அப்பாவிற்கு வயது 72 இருக்குமா என்றால் இருக்கும்.

2. என் அப்பாதான் படிக்கட்டில் நின்றுகொண்டு, நடத்துநர் தொடர்ச்சியாக அறிவுரை கொடுத்தும் என் அப்பாதான் படிக்கட்டில் நின்று கொண்டு விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. என் அப்பாவிற்கு விபத்து ஏற்பட்டவுடன் எங்கு போய் சிகிச்சை மேற்கொண்டோம் என்றால் இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள ஆரோக்கியா மருத்துவமனையில் முதல் உதவி சிகிச்சை அளிக்கப்பட்டு, மேல் சிகிச்சைக்காக மதுரை வேலம்மாள் மருத்துவமனையில் சிகிச்சை மேற்கொண்டார். மேற்படி வேலம்மாள் மருத்துவமனையில் என் அப்பா சுமார் 20 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை மேற்கொண்டாரா என்றால் ஆமாம். கடந்த 10.04.2020ம் தேதி வேலம்மாள் மருத்துவனையில் இருந்து என் அப்பா விடுவிக்கப்பட்டார் என்றால்

சரிதான். விடுவிக்கப்பட்ட சமயத்தில் என் அப்பா உயிருடன் தான் இருந்தார் என்றால் சரிதான். மீண்டும் அதே தேதியில் மதுரை அரசு ராஜாஜி மருத்துவனையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டார். என் அப்பா என்ன வேலை செய்து வந்தார் என்றால் எல்.ஐ.சி ஏஜெண்டாக வேலை பார்த்துவந்தார். எத்தனை வருடங்கள் என்றால் 30 வருடங்களுக்கு மேலாக வேலை செய்து வந்தார்.

3. ம.சா.ஆ.8 ஆவணம் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்று சொன்னால் சரியல்ல. விபத்திற்கு முழுக்கமுழுக்க என் அப்பாதான் காரணம் என்றும், 1, 2 எதிர்மனுதாரர்கள் எவ்விதத்திலும் காரணம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**(2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விராரணையை 1ம் எதிர்மனுதாரர் ஏற்றுக்கொள்கிறார்).**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்). திருமதி.P.கலை, நிலா, M.L.,
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.